# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2022.10.13 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# இலங்கை வரைதல் தொழினுட்பவியலர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்)

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

**இலங்கை வரைதல் தொழினுட்பவியலர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ காமினி வலேபொட அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 45.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை வரைதல் தொழினுட்பவியலர்கள் நிறுவகம்
## (கூட்டிணைத்தல்)

## இலங்கை வரைதல் தொழினுட்பவியலர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை*

''இலங்கை வரைதல் தொழினுட்பவியலர்கள் நிறுவகம்'' எனவழைக்கப்பட்டு அறியப்படும் நிறுவகமொன்று, நிறுவகத்தின் உறுப்பினர்களது தொழில்சார் நியமங்களையும் ஒழுக்காற்றையும் நிருவகிக்கும், கட்டுப்படுத்தும் மற்றும் பேணும் நோக்கத்துக்காகவும், பொதுவாக அதன் உறுப்பினர்களினால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க அதன் குறிக்கோள்களைப் பயனுற நிறை வேற்றுவதற்காகவும், சொல்லப்பட்ட நிறுவகத்துடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் கொண்டுநடாத்துவதற்காகவும் இதுகாலவரை தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகம், அது எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப் பத்தை அனுமதித்தல் பொதுமக்களுக்கு அனுகூலமானதாக இருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்       ஆம் இலக்க, இலங்கை வரைதல் தொழினுட்பவியலளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*இலங்கை வரைதல் தொழினுட்ப வியலர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''நிறுவகம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை வரைதல் தொழினுட்பவியலர்கள் நிறுவகத்தின் இப்போதுள்ள உறுப்பினர்களும் அல்லது (அவர்கள் உறுப் பினர்களாகத் தொடர்ந்திருக்கும்வரை) இத்தால் அமைத்துரு வாக்கப்பட்டுக் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை வரைதல் தொழினுட்பவியலர்கள் நிறுவகத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப் பின்னர் ''கூட்டிணைக்கப்பட்ட

குழு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''இலங்கை வரைதல் தொழினுட்பவியலர்கள் நிறுவகம்'' என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாகவிருத்தலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவாக வருதலும் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் எல்லா முறையினவையுமான வழக்குகளிலும் துடர்ச்சிகளிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்தகைய இலச்சினையை வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும், அதன் தற்றுணிபின்படி அதனைக் காலத்துக்குக்காலம் மாற்றுவதற்கும், தகர்ப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் கூட்டிணைக்கப்பட்ட குழு முழுத் தத்துவம் அதிகாரமும் கொண்டதாதல் வேண்டுமென்பதுடன் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைநேர்விளைவான அல்லது அதனோடிணைந்த வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்வதற்கு அது தத்துவமுடையதாதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக் கோள்கள்

**3.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக அமைத்துருவாக்கப்படுகின்றதோ அந்தப் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகுமென இருத்தல் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) வரைதல் தொழினுட்பிவியலின் தொழினுட்பங்களும் தேர்ச்சிகளுமுட்பட அதன் முன்னேற்றத்தை மேம்படுத்தலும் வளர்த்தலும்;

(ஆ) (இதனகத்துப் பின்னர் "மூதொகஆ சட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) திருத்தப்பட்டவாறான (1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைய, வரைதல் தொழினுட்பவியல் தொழிலில் ஒரு சீரானதன்மையை உறுதிப்படுத்துதலும் (இதனகத்துப் பின்னர் "மூதொகஆ" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) மூதொகஆ சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதுமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் இலங்கையில் வரைதல் தொழினுட்பவியற் கல்வியைத் திரிபுபடுத்தலும், மேற்பார்வை செய்தலும், அதற்கு மதியுரையளித்தலும், அதனைக் கட்டுத்துதலும்;

(இ) மூதொகஆ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, வரைதல் தொழினுட்பவியலில் கற்கைநெறிகளை நடாத்துதலும் மேம்படுத்துதலும்; ஆயின், கூட்டிணைக்கப்பட்ட குழு, வரைதல் தொழினுட்பவியல் தொடர்பாக மூதொக ஆணைக்குழுவினால் தராதர அங்கீகாரம்பெற்ற அத்தகைய கற்கைநெறிகளை நடாத்துவதற்கு மூதொக ஆணைக்குழுவினால் அதற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரத்தை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது;

(ஈ) வரைதல் தொழினுட்பவியல் தொழிலுக்கும் தொழில் புரிகைக்கும் அவசியமானவாறாக அல்லது இணை பானவாறாகச் சட்டத்தின் அத்தகைய கிளைகளின் கற்கையை மேம்படுத்தல்;

(உ) வரைதல் தொழினுட்பவியலின் தொழினுட்பங்களும் தேர்ச்சிகளும் உட்பட, பின்வருவனற்றின் மூலம் ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் அது தொடர்பான அல்லது அது சம்பந்தமான அறிவைப் பெறுதலையும், பரப்புதலையும், பரிமாற்றுதலையும் மேம்படுத்தல்:-

(i) பத்திரங்களை முன்வைப்பதற்காகவும் அவற்றின் மீது கலந்துரையாடல்களை நடாத்துவதற்காகவும் அரங்கொன்றை ஏற்பாடுசெய்தல்;

(ii) நூலகங்களைத் தாபித்தலும் பேணுதலும்;

(iii) வரைதல் தொழினுட்பவியலர்களின் அக்கறையை ஈர்க்கின்றனவான அத்துடன்/அல்லது பொதுமக்க ளின் நன்மைக்கான விடயங்களை வெளியிடுதல்;

(ஊ) சட்டத்தின் அட்டவணை ஆ வுக்கமையவும் மற்றும் 6 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட எவையேனும் விதிகளு டன் சேர்த்துவாசிக்கப்பட்டும் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வ தற்கான அனுமதிப் பரீட்சையொன்றை நடாத்துதலும் அல்லது நடாத்துவதற்காக ஏற்பாடுசெய்தலும், வள ஆட்களையும் பரீட்சகர்களையும் ஈடுபடுத்துதலும் அவர்களுக்கு ஊதியமளித்தலும்;

(எ) மூதொகஆ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, மூதொக ஆணைக்குழுவின் தராதர அங்கீகாரத்துடன் கூட்டிணைக் கப்பட்ட குழுவினால் வழங்கப்பட்ட கற்கைநெறிகளைப் பின்பற்றியுள்ளவர்களான ஆட்களுக்குச் சான்றிதழ் களையும் வேறு சிறப்புக்களையும் அளித்தல்;

(ஏ) கண்காட்சிகளை நடாத்துதலும் பிரபல்யமான செயல்நிறை வேற்றுகைக்காக அத்துடன்/அல்லது எய்துகைகளுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குப் பதக்கங்களை அத்துடன்/அல்லது வேறு பரிசில்களை அளித்தலும்;

(ஐ) 6 ஆம் பிரிவின்கீழ் இரண்டினுள் ஒன்றிற்காக விதித் துரைக்கப்பட்ட எவையேனும் விதிகளின் நியதிகளின்படி கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு உறுப்பாண் மைத் தரங்களைத் தீர்மானித்தலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அத்தகைய உறுப்பாண்மைத் தரங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காகப் பரீட்சார்த்திகளின் தகவுடைமையை மதிப்பீடுசெய்தலும்;

(ஒ) தொழிலின் தராதரங்களைப் பேணுவதனை உறுதிப் படுத்துவதற்கென வரைதல் தொழினுட்பவியலர்களாகத் தொழில்புரிகின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களது பொது நடத்தையையும், ஒழுக்காற் றையும், தொழிற்சார் செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்து தல்; ஆயின், அத்தகைய தராதரங்கள், (இதனகத்துப் பின்னர் “நிதொஅஅ” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் தராதரங்களுடன் (எவையேனுமிருப்பின்) ஒவ்வாதன வாக இருத்தலாகாது;

(ஓ) வரைதல் தொழினுட்பவியல் தொழில் தொடர்பாக இலங்கையில் வரைதல் தொழினுட்பவியலர்களாகத் தொழில்புரிகின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவின்

உறுப்பினர்களினதும் பொதுமக்களினதும் அக்கறை, சேமநலன், உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளை மேம்படுத்தலும் பாதுகாத்தலும்;

(ஔ) வரைதல் தொழினுட்பவியல் தொடர்பாக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைப்பை மேம்படுத்தல்;

(க) வரைதல் தொழினுட்பவியல் தொழில் தொடர்பான கருமங்கள்மீது அரசும் அதன் முகவராண்மைகளும் உட்பட எவரேனும் மூன்றாந்திறத்தவருடன் தொடர்பாடுதலும் உறுப்பாண்மையின் அக்கறையைப் பிரதிநிதித்துவப்படுத்துதலும்;

(ங) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களது பொது நடத்தை, ஒழுக்காற்று மற்றும் தொழிற்சார் செயற்பாடுகள் தொடர்பாக 6 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட எவையேனும் விதிகளின் மீறுகையிலிருந்து எழுகின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பிணக்குகளை முடிபு செய்தலும் அத்துடன்/அல்லது தீர்மானித்தலும், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் சொல்லப்பட்ட விதித்துரைக்கப்படும் நியதிகளின்படி தோதான நடவடிக்கை எடுத்தலும்;

(ச) இலங்கையிலும் வெளிநாட்டிலும் வரைதல் தொழினுட்பவியலர்களாகத் தொழில்புரிகின்றவர்களின் நன்மைக்காக அல்லது முன்னேற்றத்துக்காக அவசியமாகக்கூடிய வாறாகத் தரவு வங்கிகளைத் தாபித்தலும் பேணுதலும் உட்பட, அத்தகைய வேறு வழிமுறைகளை எடுத்தலும்;

(ஞ) உறுப்பினர்களுக்கான மதிப்பீட்டுத்திட்டமொன்றைத் தீர்மானித்தலும் தொடர்ச்சியான உயர்தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும்;

(ட) மேலேயுள்ள குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எவற்றையும் எய்துவதன் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்கள்*

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, பின்வரும் தத்துவமுட்பட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எவற்றையும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச்செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) வங்கிக்கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும், மூடிவிடுதலும்;

(ஆ) பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப் பின்றியோ பணத்தைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் மானியக்கொடைகளையும் நன்கொடை களையும் பெறுதலும் அல்லது சேகரித்தலும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கத்துக்காக உடனடியாகத் தேவைப்படாத கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதிகளைக் கூட்டிணைக்கப்பட்ட குழு தகுதியெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடுசெய்தல்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கூட்டி ணைக்கப்பட்ட குழு கருதக்கூடியவாறாகக் கொள்வனவு, கொடை, விருப்பாவணவழிக்கொடை, கொடுத்து மாற்றுகை என்பனமூலம் அல்லது வேறேதேனும் முறையில் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும் அதனால் கொள்ளப்பட்ட

அல்லது வைத்திருக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் ஆதனத்தைக் குத்தகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும் அல்லது ஈடுவைத்தலும், விற்பனைசெய்தலும், மானியக்கொடையாக அளித்தலும், கொடுத்துமாற்றலும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தலும் அல்லது கையாளுதலும்;

(உ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாதனங்களை ஆக்குதலும், ஏற்றுக்கொள்ளுதலும், புறக்குறிப்பிடுதலும் பேச்சுவார்த்தைமூலம் பெறுதலும், வாங்குதலும், விற்பனைசெய்தலும், வழங்குதலும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கத்துக்காகத் தேவைப்பட்ட எதனையும் நிர்மாணித்தலும், கொள்வனவு செய்தலும், பேணுதலும், பழுதுபார்த்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்ட ஊழியர்களை நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும், கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியத்தை அவர்களுக்குச் செலுத்துதலும், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களும் சேவையாளர்களும் ஓய்வுபெறுவதன் மேல் அவர்களுக்கும் அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் விதவைகளுக்கும் அநாதைகளுக்கும் தண்ணளிக் கொடுப்பனவுகளையும் பணிக் கொடைகளையும் செலுத்துதலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதிகாரமளிக்

கப்பட்ட எவரேனும் அலுவலரின் அல்லது முகவரியினூடாகவாயினுஞ்சரி, செய்துகொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் உறுப்பாண்மைத் தரத்துக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளுதல் தொடர்பிலும் அத்தகைய உறுப்பாண்மையைப் புதுப்பிப்பதற்காகவும் கட்டணங்களையும், ஒப்பப் பணங்களையும், உதவுதொகைகளையும் விதித்தல்;

(ஒ) மூதொக ஆணைக்குழுவினால் தராதர அங்கீகாரம் பெற்றவையும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் நடாத்தப்பட்டவையுமான கற்கைநெறிகளுக்காகக் கட்டணங்களையும், ஒப்பப்பணங்களையும், உதவுதொகைகளையும் விதித்தல்;

(ஓ) நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவையேனும் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறும் அவசியமாகும் போதும் எவையேனும் உபகுழுக்களை, ஆலோசனைக் குழுக்களை அல்லது வேறேதேனும் குழுவை நியமித்தல்;

(ஔ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களது பொது நடத்தை, ஒழுக்காற்று மற்றும் தொழிற்சார் செயற்பாடுகள் தொடர்பாக 6 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட எவையேனும் விதிகளின் மீறுகைக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்;

(க) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையவர்களும் உடையவையும் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ளவர்களும் உள்ளவையுமான வேறு ஆட்கள், முகவராண்மைகள் மற்றும் ஒழுங்கமைப்புகளுடன் உடனுழைத்தலும், அவர்களுக்கு உதவுதலும், அவர்களிடமிருந்து உதவிபெறுதலும் மற்றும் அவர்களோடு இணைப்புக்களை அபிவிருத்திசெய்தலும்;

(ங) வரைதல் தொழினுட்பவியல் விஞ்ஞானத்துடன் தொடர்பான அல்லது அது சம்பந்தமான தகவலையும் அறிவையும் பரப்புவதற்காகச் சஞ்சிகைகள், தனிப் பொருள் நூல்கள், புத்தகங்கள் மற்றும் வேறு விடயங்களை வெளியிடுதல்;

(ச) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும், அதன் ஊழியர்களுக்கு ஊதியமளிப்பதிலும், அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் உறப்பட்ட எல்லாச் செலவினங்களையும் எதிர்கொள்வதற்கு அதன் பணங்களைப் பயன்படுத்துதல்;

(ஞ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்காக இச்சட்டத்தினாலும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினாலும் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் கூட்டிணைக்கப் பட்ட குழுவின் உறுப்பாண்மையும்*

**5.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களினது முகாமை, கட்டுப்பாடு மற்றும் நிருவாகம், இச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கும் அமைய, நிறைவேற்றுக் குழுவினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள், கூட்டிணைப்பு உறுப்பினர்களையும், கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களையும், இணையுறுப்பினர்களையும் கொண்டிருப்பர்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களைத் தரப்படுத்துதல், இதற்கான அட்டவணை அ வில் குறித்துரைக் கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் 6 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட எவையேனும் விதிகளின் நியதிகளின்படி திருத்தப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம், அது மாற்றீடு செய்யப்படலாம் அல்லது நீக்கப்படலாம்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தரங்களுள் எவற்றினுள்ளும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய உறுப்பினர்களின் தகைமைகள் இதற்கான அட்டவணை ஆ வில் குறித்துரைக்கப்பட்டவாறாக விருத்தல் வேண்டுமென்பதுடன் 6 ஆம் பிரிவின்கீழ் விதித் துரைக்கப்பட்ட எவையேனும் விதிகளின் நியதிகளின்படி திருத்தப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம், அது மாற்றீடு செய்யப்படலாம் அல்லது நீக்கப்படலாம்;

(ஈ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முன்னர் கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாகவிருந்தவர்களும் இதற்கான அட்டவணை ஆ வில் விதித்துரைக்கப்பட்டவாறு வரைதல் தொழினுட்பவியல் தொழில் தொடர்பான தேசியத் தொழில்சார் தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ளவர்களுமான எல்லா ஆட்களும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின், விடயத்துக்கேற்ப, அதே தரத்தின வான கூட்டிணைப்பு உறுப்பினர்களாக அல்லது கூட்டிணைக் கப்படாத உறுப்பினர்களாக எல்லா நோக்கங்களுக்காகவும் இருத்தலும் இருக்கின்றவர்களாகக் கருதப்படுதலும் வேண்டு மென்பதுடன் இச்சட்டத்தினதும் 6 ஆம் பிரிவின்கீழ் விதித் துரைக்கப்பட்ட எவையேனும் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய அவ்வாறு தொடர்ந்திருத்தலும் வேண்டும்;

(உ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முன்னர் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாகவிருந்தவர்களும் ஆனால் இதற்கான அட்டவணை ஆ வில் விதித்துரைக்கப்பட்டவாறு வரைதல் தொழினுட்பவியல் தொழில் தொடர்பாக ஒரு தேசியத் தொழில்சார் தகைமையைப் பெற்றுக்கொண்டிராதவர்களுமான எல்லா ஆட்களும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின், விடயத்துக்கேற்ப, அதே தரத்தினவான இணையுறுப்பினர்களாக எல்லா நோக்கங் களுக்காகவும் இருத்தலும் இருக்கின்றவர்களாகக் கருதப்படுதலும் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தினதும் 6 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட எவையேனும் விதிகளினதும் ஏற்பாடு களுக்கமைய அவ்வாறு தொடர்ந்திருத்தலும் வேண்டும்;

(ஊ) இச்சட்டம் தொடங்கியபின்னர் எந்நேரத்திலும் இதற்கான அட்டவணை ஆ வில் விதித்துரைக்கப்பட்டவாறு இயைபான தேசிய தொழில்சார் தகைமையைப் பெற்றுக்கொள்கின்ற கூட்டிணைக்

கப்பட்ட குழுவின் இணையுறுப்பினர்கள், விண்ணப்பத்தின்மீது, விடயத்துக்கேற்ப, கூட்டிணைப்பு உறுப்பினர்களாக அல்லது கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களாக மீளப்பதிவுசெய்யப்படுதல் வேண்டும்;

(3) (அ) பதவிதாங்குநர்கள், நிறைவேற்றுக் குழு தேர்ந்தெடுக் கப்படுவதற்கு நேர்முன்னர் கடந்த இரண்டாண்டுகளுக்காக உறுப்பாண்மையைப் பேணியிருந்தவர்களும் நிறைவேற்றுக் குழுவின் பாகமாக இருந்துள்ளவர்களும் (சேர் இணையுறுப் பினர்களும் சேர் தகுதிகாண்நிலை உறுப்பினர்களும் புறநீங்கலான வர்களுமான) கூட்டிணைப்பு உறுப்பினர்கள் மற்றும் சேர் உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) நிறைவேற்றுக்குழுவின் பதவிதாங்குநர்கள் பதவிகளுக்காகப் பெறப்பட்ட பெயர்நியமனங்கள், நிறைவேற்றுக் குழுவினால் நியமிக்கப்பட்ட ஓர் உபகுழுவினால் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் முன்மொழியப்படுதல் வேண்டும்; ஆயின், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிறைவேற்றுக் குழுவினது பதவிதாங்குநரெவரும் ஏதேனுமொரு (01) காலத்தின்போது மூன்று (03) ஆண்டுகளுக்கு மேற்பட பதவிவகித்தலாகாது;

(இ) நிறைவேற்றுக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; ஆயின், நிறைவேற்றுக் குழுவானது பதின்மூன்றுக்குக் குறையாதோரும் இருபத்தேழுக்கு மேற்படா தோருமான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) எல்லோரும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பதவி தாங்குநர்களாகவிருக்கவேண்டிய கௌரவத் தலைவர், மூன்று கௌரவத் துணைத்தலைவர்கள், கௌரவப் பொதுச் செயலாளர், கௌரவ உதவிச் செயலாளர், கௌரவப் பொருளாளர் மற்றும் கௌரவ உதவிப் பொருளாளர்;

(ii) கடந்தகாலத் தலைவர்கள்;

(iii) 6 ஆம் பிரிவின்கீழான விதிகளினால் விதித்துரைக் கப்பட்டமுறையில் (சேர் இணையுறுப்பினர்களும் சேர் தகுதிகாண்நிலை உறுப்பினர்களும் புறநீங்கலாக) கூட்டிணைப்பு உறுப்பினர்களுளிருந்தும் சேர் உறுப்பினர்களுளிருந்தும் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய நிறைவேற்றுக் குழுவின் அத்தகைய வேறு உறுப்பினர்கள்;

(iv) பின்வரும் தரங்களுள் ஒவ்வொன்றிலிருந்தும் அதாவது, இணையுறுப்பினர்கள், தகுதிகாண்நிலை உறுப்பினர்கள் மற்றும் மாணவ உறுப்பினர்கள் என்போரிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டிய நிறைவேற்றுக் குழுவில் வாக்களிக்கும் உரிமைகள் இல்லாத அவதானிப் பாளர்களான மூன்று உறுப்பினர்கள்.

*(4)* (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிறைவேற்றுக் குழு, 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் ஏற்பாடுசெய்யப் பட்டவாறான முறையில் முதலாவது நிறைவேற்றுக் குழு தேர்ந் தெடுக்கப்படும்வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிறைவேற்றுக் குழுவாகப் பணியாற்றுதல் வேண்டும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது நிறைவேற்றுக் குழு இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டினுள் தேர்ந் தெடுக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்

**6.** *(1)* கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டத்தி லும் சமுகமளித்து வாக்களிக்கின்ற கூட்டிணைப்பு உறுப்பினர் களினதும் சேர் உறுப்பினர்களினதும் மூன்றிலிரண்டு பங்கினருக் குக் குறையாதவர்களின் பெரும்பான்மைகொண்டும் (சேர் இணை யுறுப்பினர்களும் சேர் தகுதிகாண்நிலை உறுப்பினர்களும் புறநீங்க லாக) பின்வரும் கருமங்களுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டிணைக் கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:

(அ) உறுப்பாண்மையைத் தரப்படுத்துதலும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், மீளப்பெறுதலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவிநீங்குதலும், உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும்;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தலும், பதவிதாங்குநர்கள் பதவிநீங்குதலும் அல்லது பதவியை வறிதாக்குதலும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் அவர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும்;

(இ) நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும் அதன் தத்துவங்களும், நடத்தையும் கடமைகளும் உறுப்பினர்களின் பதவிக்காலங்களும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தை, வேறு பொதுக் கூட்டங்களை, விசேட பொதுக் கூட்டங்களை மற்றும் நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களை அழைத்தலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், மற்றும் அத்தகைய கூட்டங்களின் நேரமும், இடமும், அறிவித்தலும், நிகழ்ச்சிநிரலும் மற்றும் அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும்;

(ஊ) நிறைவேற்றுக் குழுவுறுப்பினர்களினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினதும் தகைமைகளும் தகைமையீனங்களும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் மற்றும் அதன் கணக்குகளின் பேணுகையும் கணக்காய்வும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களது பொது நடத்தை, ஒழுக்காறு மற்றும் தொழில்சார் செயற்பாடுகள் தொடர்பான நியமங்கள்;

(ஐ) முறைப்பாடுகளின் படிவமுட்பட, ஒழுக்காற்று விசாரணைகள் பற்றிய நடவடிக்கைமுறை, ஒழுக்காற்றுக் குழுக்களை நியமித்தலும் அவற்றுக்குச் சட்ட உதவி வழங்குதலும், குற்றச்சாட்டுகளை வகுத்தமைத்தல், பதிலாக விளக்கங்களைக் கொடுத்துதவுதல், அறிவித்தல்களை வழங்குதல், சட்டப் பிரதிநிதித்துவங்களுக்குத் திறத்தவர்களுக்குள்ள உரிமைகள், அவற்றுக்கு ஏற்புடையனவான சான்று பற்றிய விதிகள், அவற்றில் வழக்குநடவடிக்கைகள் பற்றிய பதிவேட்டைப் பேணுதல் மற்றும் ஒழுக்காற்றுக் குழுக்களின் அறிக்கைகளினது படிவமும் உள்ளீடும்;

(ஒ) வரைதல் தொழினுட்பவியலில் கற்கைநெறிகளை நடாத்துதலும் மேம்படுத்தலும்; ஆயின், விதிகளானவை, வரைதல் தொழினுட்பவியல் தொடர்பாக மூதொக ஆணைக்குழுவினால் தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட அத்தகைய கற்கைநெறிகளை நடாத்துவதற்கு மூதொக ஆணைக்குழுவினாலும் மூதொகஆ சட்டத்தின் ஏற்பாடுகளினாலும் அதற்குக் கொடுக்கப்பட்ட ஏதேனும் அதிகாரத்துக்கு எப்போதும் அமைந்தனவாகவிருத்தல் வேண்டும்.

(ஓ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அல்லது பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமைசெய்வதற்காக, அதன் குறிக்கோள்களை எய்துவதற்காக மற்றும் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாகக்கூடியவாறாக இதனகத்துமுன்னர் குறிப்பாகக் குறிப்பிடப்படாத அத்தகைய வேறெல்லாக் கருமங்களும்.

(2) பிரிவு 5 (5) (ஆ) வின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது நிறைவேற்றுக் குழுவைத் தேர்ந்தெடுக்குமுன்னர் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிறைவேற்றுக் குழுவானது சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் விதிகளை ஆக்குதல் வேண்டும்; ஆயின், இந்த வரையறுக்கப்பட்ட இடைக்காலக் காலப்பகுதியின்போது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு

நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ள கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகள், அவை இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளைப்போன்று அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அவற்றுக்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது ஒழிக்கப்படலாம்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அப்போதைக்கான விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவானது அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**7.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையுதிர்ப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக வரக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனமும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக்கொடுக்க, கொடுத்து மாற்ற, கையாள அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத் தத்துவத்துடனும் சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதிகள்

**8.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் சார்பில் கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையுதிர்ப்புகள், மானியக்கொடைகள், நன்கொடைகள், உதவுதொகைகள் அல்லது கட்டணங்கள் என்றவகையாக இதுகாலவரை பெறப்பட்ட அல்லது இதன்பின்னர் பெறப்படும் எல்லாப் பணங்களும், நிறை

வேற்றுக் குழு தீர்மானிக்கக்கூடியவாறான ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியத்தினது வரவுக்கு வைப்பிலிடப்படுதலும் வேண்டும்; ஆயின், நிதியத்தினால் பெறப்படவேண்டிய எவையேனும் வெளிநாட்டு மானியக்கொடைகள் அல்லது அளிப்புகள், பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தினூடாகக் கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியத்தினது வரவுக்கு நெறிப்படுத்தப்பட்டு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மறுசீரமைப்பு, அபிவிருத்தி அல்லது சீராக்கல் நோக்கத்துக்காகத் தேய்மான நிதியமொன்றை அல்லது கடனாழ் நிதியமொன்றைக் கூட்டிணைக்கப்பட்ட குழு வானது தாபிக்கலாம்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழு இச்சட்டத்தின்கீழ் அதன் தத்து வங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு ஏப்பிறல் 1 ஆந் திகதியிலிருந்து அடுத்துவரும் ஆண்டின் மாச்சு 31 ஆந் திகதிவரையாதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவிடமிருந்து வருமதி யானவையும் கூட்டிணைக்கப் பட்ட குழுவுக்குச் செலுத்தப்படற் பாலவையுமான தனிசுகள்

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முற்போந்த நாளன்றுள்ள கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத்தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பது டன் அந்நாளன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் அதற்குச் செலுத்தப்படவேண்டிய ஒப்பப் பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின்கீழும் அதன் நோக்கத்துக்காகவும் அமைக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவுக் குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**10.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினரெவரும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக உறுப்பாண்மைக் கட்டணமாக அத்தகைய உறுப்பினரிடமிருந்து வருமதியான தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையை அவரது சம்மதமின்றிச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்*

**11.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது அதன் வருமானம், செலவினம் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வுகளும்*

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,-

(அ) இலங்கையின் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் நிறைவேற்றுக் குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவரான தனியாளொருவர்; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர்கள் குழுமத்தின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கையின் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் நிறைவேற்றுக் குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழை உடையவராக வுள்ளாரோ அந்தக் கணக்காளர்கள் குழுமமொன்று,

என்று பொருளாகும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**12.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை கௌரவச் செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் நிறைவேற்றுக் குழுவின் முன்னர் பெறப்பட்ட அதிகாரத்துடனன்றியும் நிறைவேற்றுக் குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட வேண்டிய நிறைவேற்றுக் குழுவின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றியும் எத்தகையதுமான ஏதேனும் சாதனத்தில் பொறிக்கப்படுதலுமாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அத்தகைய சாதனங்களில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனுமாள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாகவிருத்தலும் வேண்டும்.

தலைப்புப் பெயர்களையும் பதவிப் பெயர்களையும் பயன்படுத்துதல்

**13.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினரொருவராகப் பதிவுசெய்யப்படுகின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு கூட்டுறுப்பினரும் அல்லது சேர் கூட்டுறுப்பினரும், தாம் கூட்டுறுப்பினராகவுள்ளாரென்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு அவரது பெயரின் பின்னால் "வதொநிகூ (இலங்கை)" என்ற சுருக்கீட்டுப் பதவிப்பெயரைப் பயன்படுத்துவதற்கு உரிமையுடையவராதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினரொருவராகப் பதிவுசெய்யப்படுகின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பொது உறுப்பினரும் அல்லது சேர் பொது உறுப்பினரும், தாம் உறுப்பினரொருவராகவுள்ளாரென்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு அவரது பெயரின் பின்னால் "வதொநிஉ (இலங்கை)" என்ற சுருக்கீட்டுப் பதவிப்பெயரைப் பயன்படுத்துவதற்கு உரிமையுடையவராதல் வேண்டும்.

(3) முற்போந்த (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் நியதிகளின்படி "வதொநிகூ (இலங்கை)" அல்லது "வதொநிஉ (இலங்கை)" என்ற சுருக்கீட்டுப் பதவிப்பெயரைப் பயன்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ள ஒவ்வோர் உறுப்பினரும், விடயத்துக்கேற்ப, அவ்வுறுப்பினரின் தொழில்புரிகைக்கு இயைபானதும் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் அல்லது நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் இடாப்பில் பிரதிபலிக்கப்பட்டவாறானதுமான "கட்டிட, குடியியல், மின்சார, பொறிமுறை மற்றும் MEP" என்ற

முற்கூறுகளுள் ஏதேனுமொன்றுடன் சேர்த்து ''வரைதல் தொழினுட்பவியலர்'' என்ற தலைப்புப்பெயரை எடுப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் உரித்துடையவராதலும் வேண்டும்; ஆயின், அத்தகைய உறுப்பினர் முறையாக உரித்துடையவராகவுள்ள சுருக்கீட்டுப் பதவிப்பெயரின் பயன்பாடு இல்லாதபோது அத்தலைப்புப்பெயரைப் பயன்படுத்தமுடியாது.

தலைப்புப் பெயர்களைப் பயன் படுத்துதல் பற்றிய மட்டுப்பாடு

**14.** (1) ஆளெவரும் விடயத்துக்கேற்ப ஏதேனும் தரத்தில் அல்லது வகுப்பில் உறுப்பினரொருவராக அப்போதைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டாலொழிய, அத்தகைய ஆள் 13 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டதும் மற்றும் அப்பிரிவின்கீழ் 13 ஆம் பிரிவில் குறித் துரைக்கப்பட்டவாறான அத்தரத்தில் அல்லது வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினரொருவர் மட்டுமே எடுக்கக்கூடியதும் அல்லது பயன்படுத்தக்கூடியதுமான ஏதேனும் தலைப்புப்பெயரை, விவரணத்தை அல்லது சுருக்கீட்டை எடுத்தலோ அல்லது பயன் படுத்துதலோ ஆகாது.

(2) முற்போந்த உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனு மாள்–

(அ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இப்பிரிவு வலுவுக்கு வந்தபின் ஓராண்டு முடிவுற்ற பின்னர், வரைதல் தொழினுட்பவியலராக அவரினால் அளிக்கப்பட்ட சேவைகளுக்காக எவையேனும் கட்டணங் களை அறவிடுவதற்காகச் சட்ட நீதிமன்றமொன்றில் ஏதேனும் வழக்கைத் தொடுப்பதற்கு அல்லது பேணு வதற்கு உரித்துடையவராதலாகாது.

வரைதல் தொழினுட்ப வியலர் மற்றும் வரைதல் தொழினுட்ப வியல் என்பவற்றின் பொருள்

**15.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆளொருவர் தாமாகவோ அல்லது வேறெவரேனுமாளுடன் பங்காண்மையிலோ அவரினால் பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள பிரதிபயனுக்காக அல்லது ஊதியத்துக்காகப் பின்வருமாறு செய்யின் அவர் வரைதல் தொழினுட்பவியலரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்:–

(அ) கட்டிட, குடியியல், மின்சார, பொறிமுறை மற்றும் MEP வரைதல்களில் தன்னை ஈடுபடுத்தினால்.

(ஆ) காலத்துக்குக்காலம் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அல்லது நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் வெளியிடப்படவுள்ள மிக்க அண்மையிலான இடாப்பில் பெயர் இருந்தால்; ஆயின், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் விடயத்தில், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக வரைதல் தொழினுட்பவியலரொருவராக அவர் சேவை அமைத்துருவாக்கத் தொழில்புரிகையை அளித்தல் வேண்டும்.

(இ) வரைதல் தொழினுட்பவியலரொருவராகச் சேவை அமைத்துருவாக்கல் தொழில்புரிகையாகவுள்ளதென நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் சேவையை அளித்தால்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின்கீழும் இதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளின்கீழும் வழங்கப்பட்ட உறுப்பாண்மையின் தரப்படுத்தலுக்கும் வகுப்பாக்கஞ்செய்தலுக்கும் அமைய, கற்கைநெறிகள், தராதர அங்கீகாரம், பதிவு முதலியவற்றின் நடாத்துகையிற் போன்று தோதானவிடத்து வரைதல் தொழினுட்பவியல் என்பது, வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு வரைநரின்/வரையுநரின் தொழில்புரிகையை உள்ளடக்குவதாகவும் பொருளாதலும் வேண்டும்.

**16.** (1) இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் எவையேனும் ஏற்பாடுகளை அசட்டைசெய்கின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் நீதிமன்றத்தின்முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். தவறுகள்

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஓர் ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து, அப்போது-

(அ) அவ்வாட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக விருப்பின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் அலுவலரும்; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமமாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர், அத்தகைய தவறு தாம் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென அவர் எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படலாகாது.

*நிதி, ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், சொத்துக்கள் மற்றும் ஆதனம்*

**17**. ஒன்பதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் கீழும் அதன் நோக்கத்துக்காகவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தொடக்க மூலதனம், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்றுள்ள கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மூலதன ஒதுக்காகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்றுள்ள கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும், சொத்துக்களும், ஆதனமும், இச்சட்டத்தின்கீழும் அதன் நோக்கத்துக்குமாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒப்பந்தங்களாகவும், உடன்படிக்கைகளாகவும், சொத்துக்களாகவும், ஆதனமாகவும் கருதப்படுதலும் வேண்டும்.

*கலைத்தலின் மீது எஞ்சியுள்ள ஆதனம்*

**18**. கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மேல், எல்லாத் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய

ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது, ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடைய மற்றும் ஏதேனும் வருமானத்தை அல்லது வேறெவையேனும் ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளித்தலிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளின்மூலம் தடைசெய்யப்பட்ட வேறேதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள், கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்படுவதன்மீது அல்லது அதன்பின்னர் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப் படலாம்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்*

**19**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் மற்றும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர் களும், அவர்களின்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருகின்றவர்களுமான அத்தகையவாறான வர்கள்தவிர வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**20**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணைகள்

### அட்டவணை அ

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள், கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்கள் மற்றும் சேர் உறுப்பினர்களைத் தரப்படுத்தலானது பின்வருமாறிருத்தல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர், ஒரு கூட்டுறுப்பினராக அல்லது பொது உறுப்பினராகத் தரப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் சேர் உறுப்பினர், ஒரு சேர் கூட்டுறுப்பினராக அல்லது ஒரு சேர் பொது உறுப்பினராக அல்லது ஒரு சேர் இணையுறுப்பினராக அல்லது ஒரு சேர் தகுதிகாண்நிலை உறுப்பினராகத் தரப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர், ஓர் இணையுறுப்பினராக அல்லது ஒரு தகுதிகாண்நிலை உறுப்பினராக அல்லது ஒரு மாணவ உறுப்பினராகத் தரப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

அட்டவணை ஆ

(1) ஆளொருவர், தேசியத் தொழில் தகைமை மட்டம் 5 - வரைதல் தொழினுட்பவியலை உடையவராகவிருப்பதுடன் தொடர்ச்சியாக 6 ஆண்டுகளுக்கு நிறைவேற்றுக் குழுவில் சேவையாற்றியிருந்தால் கூட்டுறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(2) ஆளொருவர், தேசியத் தொழில் தகைமை மட்டம் 5 - வரைதல் தொழினுட்பவியலை உடையவராகவிருந்தால் பொது உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(3) ஆளொருவர், தேசியத் தொழில் தகைமை மட்டம் 4 - வரையுநர் என்பதனை உடையவராகவிருந்தால் இணையுறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(4) ஆளொருவர், தேசியத் தொழில் தகைமை மட்டம் 3 - வரையுநர் என்பதனை உடையவராகவிருந்தால் தகுதிகாண்நிலை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(5) ஆளொருவர், தேசியத் தொழில் தகைமை மட்டம் 2 அல்லது அதற்குக் குறைவானதை உடையவராகவிருந்தால் மாணவ உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.